(3) 73,600 இம்பீரியல் கலன் உராய்வு நீக்கும் எண்ணெய் கொள் ளளவு கொண்டதும், செங்கற் கட்டிடமும் ஓட்டினால் வேயப் பட்ட கூரையும், பூட்டுப் பொருத்துகள் உள்ள உருக்குக் கதவுகளும் உள்ளதும் 2,350 சதுரஅடி களஞ்சியத் தரைப் பரப்பு உடையதும் எஸ்ஸோ இஸ்டாண்டட் ஈஸ்டேன் கூட்டிணைக் கப்பட்ட தாபனத்திடமிருந்து பெறப்பட்டு உரித்தாக்கப்பட்ட இப்போது கொலன்னாவையிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வளவுகளின் பிராந்தியம் 2 ஆம் பிரிவை உள்ளடக்குவதுமான காணியில் அமைந்துள்ள 7 ஆம், 8 ஆம் இலக்க மூடப்பட்ட குதம் ; அத்துடன்

(4) 3,22,000 இம்பீரியல் கலன் உராய்வு நீக்கும் எண்ணெய் கொள் ளளவு கொண்டதும் 20,000 சதுரஅடி களஞ்சியத் தளப் பரப்புடையதும் எழடி உயரத்திற்கு சங்கிலி இணைப்புக் கம்பி வேலியால் அடைக்கப்பட்டதும் பிரதான எல்லைச் சுவரினாலும் கொங்கிறீற்றுக் காலையினதும் பழைய பம்பி வீட்டினதும் விளிம்பினாலும் எல்லைப் படுத்தப்பட்டதும் கொலன்னாவையி லுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வளவுகளின் பிராந்தியம் 3 இல் அமைந்துள்ளதுமான திறந்த வெளிப் பண்டகசாலை.

பிரதான சுங்கச் சேகரிப்பாளர்.

கொழும்பு,
1973 ம் ௵ மாச்சு ௴ 7 ந் உ.

3–1000/3—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

**கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்**

ஐசு, வளி நீர்வகை உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபை, (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவு வாயிலாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் வகையாகத் தீர்மானங்களை மாற்றிக் கொள்ளவிருக்கும் தமது கருத்தினை அக் கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவில் அமைந்துள்ள ஏற்பாடுகளுக்கமைய, இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கெதிரான ஆட்சேபனைகள், 1973 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 04 ந் தேதி நண்பகல் 12 மணிவரையும் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றுடன், எழுத்து வாயிலாக அனுப்பப்படுதல் வேண்டும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தலைவர்,
ஐசு, வளிவகை உற்பத்தித் தொழிலுக்கான
கூலி நிருணய சபை.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 13 ந் வ.

அட்டவணை

ஐசு, வளிநீர்வகை உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபையால் ஆக்கப்பட்டு 1963 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ம் தேதி வெளிவந்த 13,535 ம் இலக்க அசாதாரணச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவை காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அந்த அட்டவணையின் V ம் பாகத்தில் " அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு) " என்னும் தலைப்பின்கீழ் 1 ம் பந்தியின் (அ) உப-பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உப-பந்தியினை இடுவதன்மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

**அரசாங்க விடுமுறைகள் (15 ம் பிரிவு)**

1. (அ) இப் பந்தியினதும் 2 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் பணி புரியும் தொழிலாளர்கள் யாவருக்கும் 1971 ஆண்டின் 29 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கிணங்க,பின்வரும் அரசாங்க விடுமுறைகளை ஊதியத்துடன்கூடிய விடுமுறைகளாக,வழங்குதல் வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கற் திருநாள்
(2) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளுக்கு நேரடுத்த முந்திய நாள்,
(3) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்,
(4) மீலா-துன்-நபி (நபிகள் நாயகம் ஸல் அவர்கள்) பிறந்த திருநாள்,
(5) மே நாள் (மே 1 ம் தேதி),
(6) இலங்கைக் குடியரசுத் திருநாள், (மே 22ம் தேதி),
(7) சிங்கள விசாக மாதத்தின் பூரணைக்கு நேரடுத்த நாள்,
(8) பண்டாரநாயக்க நினைவு நாள் (செத்தெம்பர் 26 ம் தேதி),
(9) நத்தார்த் திருநாள்

3—990—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**இணக்கச் சபைகள் சட்டம்**
கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேச கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 மாச்சு மாதம் 26 ஆந் தேதிய 14,899 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 2 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நீர்வேலிக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த ஐயாத்துரை துரைராசா அவர்கள்.
(2) நீர்வேலி, நீர்வேலி மத்தியைச் சேர்ந்த நாகலிங்கம் சிதம்பரநாதர் அவர்கள்.
(3) நீர்வேலி, நீர்வேலி மத்தியைச் சேர்ந்த கனகசபை சபாபதி அவர்கள்.
(4) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சனகசபை வல்லிபுரம் அவர்கள்.
(5) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னப்பு தர்மலிங்கம் அவர்கள்.
(6) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள்.
(7) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த முருகேசு வேலாயுத பிள்ளை அவர்கள்.
(8) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் அவர்கள்.
(9) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்கள்.
(10) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்தம்பி ஐயாத்துரை அவர்கள்.
(11) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னையா நாகலிங்கம் அவர்கள்.
(12) நீர்வேலி, நீர்வேலி தெற்கு, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பேரம்பலம் செல்லையா அவர்கள்.
(13) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இராமலிங்கம் அப்பாத்துரை அவர்கள்.
(14) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த வைரமுத்து செல்லத்துரை அவர்கள்.
(15) நீர்வேலி, நீர்வேலி தெற்கு, " குமரபுரி " ஐச் சேர்ந்த சின்னத்தம்பி முருகேசு அவர்கள்.
(16) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இளையதம்பி தவராசா அவர்கள்.
(17) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த பண்டாரம் தில்லையம்பலம் அவர்கள்.
(18) நீர்வேலி, நீர்வேலி மத்தியைச் சேர்ந்த வேதவல்லி கந்தையா அவர்கள்.
(19) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த பேரம்பலம் தம்பையா அவர்கள்.
(20) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கந்தன் பசுபதி அவர்கள்.
(21) நீர்வேலி, நீர்வேலி மத்தியைச் சேர்ந்த அத்தியார் அருணசலம் பாலசுப்பிரமணியம் அவர்கள்.
(22) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த தம்பு பத்மநாதன் அவர்கள்.
(23) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கந்தப்பு இராசதுரை அவர்கள்.
(24) நீர்வேலி, கந்தசாமிகோவிலடியைச் சேர்ந்த எஸ். கனகசபாபதி ஐயர் அவர்கள்.
(25) நீர்வேலி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள்.
(26) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசசிங்கம் அவர்கள்.

(ஆ) நீர்வேலி, நீர்வேலி தெற்கைச் சேர்ந்த ஐயாத்துரை துரைராசா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 15 ந் வ.

3—1028—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

## கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டம்

### அறிவித்தல்

இந் நிருணயத்தினடியிலுள்ள அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட கடைகளினும், குறிக்கப்பட்ட கடைகளின் அலுவலகங்களினுமுள்ள தொழிலாளர் தொடர்பாக இவ் வரைவு நிருணயம் ஊதிய முறை மன்றினால் ஆக்கப்பட்டுள்ளது என, (சட்டவாக்கங்களின் 129 ம் அத்தியாயமாகிய) கடை, அலுவலகத் தொழிலாளர் வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை அதிகாரச் சட்டத்தின் 28 ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வரைவு நிருணயத்துக்கெதிரான ஆட்சேபனைகள், 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ந் தேதி நண்பகல் 12 மணி வரையும் முறை மன்றுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகும்.

அப்படிப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும், அவ் வண்ணம் ஆட்சேபிப்பதற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றுடன், எழுத்து வாயிலாக அனுப்பப்படுதல் வேண்டும்.

டபிள்யூ. எல். பி. த மெல்,
தலைவர்,
மேற்கூறிய கடைகளினும், அவற்றின் அலுவலகங்களினும்
வேலைக்கமர்ந்திருப்போருக்கான ஊதிய முறைமன்று.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 13 ந் உ.

### வரைவு நிருணயம்

1. இந்நிருணயமானது, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட கடையொவ்வொன்றினும் அக்கடைகளின் அலுவலகங்களினும் வேலைபார்ப்பவர்களும் கீழே குறிக்கப்பட்டுள்ளவர்களுமான ஊழியரின் வகுப்புகளுக்கு இயைபுடையதாதல் வேண்டும் :—

1. விற்பனைச் சிறுமிகளும் சரிபார்ப்பவர்களுமுட்பட்ட விற்பனையாளர் ;
2. அடுக்கிக்கட்டுவோர், சேவகர், தூதுச்சிறுவர், ஒப்படைக்குஞ்சிறுவர், எண்ணற்பீடற்சிறுவர், மிதிவண்டிச்சிறுவர், ஏவலாளர் ஆகியோருட்பட்ட கடைச்சிறுவர் ;
3. தட்டெழுத்தாளரும் பேரேட்டு லிகிதருமுட்பட்ட ஆளுல் கப்பற்றுறை லிகிதர் விலக்கான லிகிதர் ;
4. காசாளர் ;
5. தொலைபேசி இயக்கிகள் ;
6. பண்டகசாலைப் பொறுப்பாளர் ;
7. தொழிலாளர்.

2. 1 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட எக்கடையிலும் அலுவலகத்திலும் வேலைபார்க்கும் எவ்வூழியருக்கும் கொடுபடவேண்டிய கீழெல்லை வேதன வீதம் கீழே குறிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும் :—

| ஒரு மாதத்திற்குக் கீழெல்லை வேதன வீதம் | ஊழியரின் வகுப்பு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனைச் சிறுமிகளும் சரிபார்ப்பவர்களுமுட்பட்ட விற்பனையாளர் | | அடுக்கிக் கட்டுவோர், சேவகர், தூதுச் சிறுவர், ஒப்படைக்குஞ்சிறுவர், எண்ணற் பீடச்சிறுவர், மிதிவண்டிச் சிறுவர், ஏவலாளர் ஆகியோருட்பட்ட கடைச் சிறுவர் | | தட்டெழுத்தாளரும் பேரேட்டு லிகிதருமுட்பட்ட ஆளுல் கப்பற்றுறை லிகிதர் விலக்கலான லிகிதர் | | காசாளர் | | தொலைபேசி இயக்கிகள் | | பண்டகசாலைப் பொறுப்பாளர் | | தொழிலாளர் | |
| தொழில் புரியும் ஆண்டு | ரூ. | ச. | ரூ. | ச. | ரூ. | ச. | ரூ. | ச. | ரூ. | ச. | ரூ. | ச. | ரூ. | ச. |
| தொழில் புரியும் 1 ம் ஆண்டில் | 160 | 0 | 110 | 0 | 175 | 0 | 240 | 0 | 160 | 0 | 240 | 0 | 100 | 0 |
| தொழில் புரியும் 2 ம் ஆண்டில் | 170 | 0 | 115 | 0 | 185 | 0 | 250 | 0 | 170 | 0 | 250 | 0 | 105 | 0 |
| தொழில் புரியும் 3 ம் ஆண்டில் | 180 | 0 | 120 | 0 | 195 | 0 | 260 | 0 | 180 | 0 | 260 | 0 | 110 | 0 |
| தொழில் புரியும் 4 ம் ஆண்டில் | 190 | 0 | 125 | 0 | 205 | 0 | 270 | 0 | 190 | 0 | 270 | 0 | 115 | 0 |
| தொழில் புரியும் 5 ம் ஆண்டில் | 200 | 0 | 130 | 0 | 215 | 0 | 280 | 0 | 200 | 0 | 280 | 0 | 120 | 0 |
| தொழில் புரியும் 6 ம் ஆண்டில் | 210 | 0 | 135 | 0 | 225 | 0 | 290 | 0 | 210 | 0 | 290 | 0 | 125 | 0 |
| தொழில் புரியும் 7 ம் ஆண்டில் | 220 | 0 | 140 | 0 | 235 | 0 | 300 | 0 | 220 | 0 | 300 | 0 | 130 | 0 |
| தொழில் புரியும் 8 ம் ஆண்டில் | 230 | 0 | 145 | 0 | 245 | 0 | 310 | 0 | 230 | 0 | 310 | 0 | 135 | 0 |
| தொழில் புரியும் 9 ம் ஆண்டில் | 240 | 0 | 150 | 0 | 255 | 0 | 320 | 0 | 240 | 0 | 320 | 0 | 140 | 0 |
| தொழில் புரியும் 10 ம் ஆண்டில் | 250 | 0 | 155 | 0 | 265 | 0 | 330 | 0 | 250 | 0 | 330 | 0 | 145 | 0 |
| தொழில் புரியும் 11 ம் ஆண்டில் | 260 | 0 | 160 | 0 | 275 | 0 | 340 | 0 | 260 | 0 | 340 | 0 | 150 | 0 |
| தொழில் புரியும் 12 ம் ஆண்டில் | 270 | 0 | 170 | 0 | 285 | 0 | 350 | 0 | 270 | 0 | 350 | 0 | 157 | 50 |
| தொழில் புரியும் 13 ம் ஆண்டில் | 280 | 0 | 180 | 0 | 295 | 0 | 360 | 0 | 280 | 0 | 360 | 0 | 165 | 0 |
| தொழில் புரியும் 14 ம் ஆண்டில் | 295 | 0 | 190 | 0 | 310 | 0 | 370 | 0 | 295 | 0 | 370 | 0 | 172 | 50 |
| தொழில் புரியும் 15 ம் ஆண்டில் | 310 | 0 | 200 | 0 | 325 | 0 | 380 | 0 | 310 | 0 | 380 | 0 | 180 | 0 |
| தொழில் புரியும் 16 ம் ஆண்டில் | 325 | 0 | 210 | 0 | 340 | 0 | 390 | 0 | 325 | 0 | 390 | 0 | 187 | 50 |
| தொழில் புரியும் 17 ம் ஆண்டில் | 340 | 0 | 220 | 0 | 355 | 0 | 400 | 0 | 340 | 0 | 400 | 0 | 195 | 0 |
| தொழில் புரியும் 18 ம் ஆண்டில் | 355 | 0 | 230 | 0 | 370 | 0 | 410 | 0 | 355 | 0 | 410 | 0 | 202 | 50 |
| தொழில் புரியும் 19 ம் ஆண்டில் | 370 | 0 | 240 | 0 | 385 | 0 | 420 | 0 | 370 | 0 | 420 | 0 | 210 | 0 |
| தொழில் புரியும் 20 ம் ஆண்டில் | 385 | 0 | 250 | 0 | 400 | 0 | 430 | 0 | 385 | 0 | 430 | 0 | 217 | 0 |
| தொழில் புரியும் 21 ம் ஆண்டில் | 400 | 0 | 260 | 0 | 415 | 0 | 440 | 0 | 400 | 0 | 440 | 0 | 225 | 0 |
| தொழில் புரியும் 22 ம் ஆண்டில் | 415 | 0 | 270 | 0 | 430 | 0 | 440 | 0 | 415 | 0 | 440 | 0 | 232 | 50 |
| தொழில் புரியும் 23 ம் ஆண்டிலும் | 430 | 0 | 280 | 0 | 445 | 0 | 440 | 0 | 430 | 0 | 440 | 0 | 240 | 0 |
| தொழில் புரியும் பிந்திய ஆண்டு ஒவ்வொன்றும் | | | | | | | | | | | | | | |

3. எவ்வேலைக்கமர்த்துபவரின் கீழாயினும் தொழில்புரிதல் தொடர்பாக, இந்நிருணயத்தின் 2 ம் பந்தியில், " தொழில்புரியும் 1 ம் ஆண்டு " என்னும் பதம், ஓர் ஊழியர் அவ்வேலைக்கமர்த்துபவரின் முதன்முதல் தொழிலிலமர்ந்த தேதி தொடக்கம் அடுத்தடுத்த 12 மாத காலமெனப் பொருள்படும்.

4. இந்நிருணயத்தின் நோக்கத்திற்காக —

(1) " விற்பனையாளர் " என்பது, (129 ம் அத்தியாயமாகிய) கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தல்) அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமைய, வாடிக்கைக்காரருக்குச் சேவைபுரியும் நோக்கத்திற்காக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒருவர் எனப் பொருள்படும் ;

(2) " கடைச் சிறுவர் " என்பது, சில்லறைக் கடமைகளை ஆற்றுதற்கு வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒருவர் எனப் பொருள்படும். அடுக்கிக் கட்டுவோர், சேவகர், தூதுச்சிறுவர், ஒப்படைக்குஞ் சிறுவர், எண்ணற்பீடச் சிறுவர், மிதிவண்டிச் சிறுவர், ஏவலாளர் என்பவற்றையும் இது உட்படுத்தும் ;

(3) " லிகிதர் " என்பது, தட்டெழுத்தடிப்பு, கணக்கு என்பன உட்பட்ட எழுத்து வேலையில் முற்றுக அல்லது பிரதானமாக ஈடுபடும் ஒருவர் எனப் பொருள்படும் ;

(4) " காசாளர் " என்பது, பணம் பெறுதற்காயினும் அல்லது பெறுதற்கும் கொடுத்தற்கும், பணத்தைத் தம்வசம் வைத்திருத்தற்கும், வேண்டிய சாதனங்களையும், புத்தகங்களையும் எழுதிவைத்தற்கும், பணிக்கப்படுமிடத்து பணத்தை வங்கியிற் கட்டுதலைக் கவனித்தற்கும் முற்றிலும் அல்லது பிரதானமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒருவர் எனப் பொருள்படும் ;

(5) " தொலைபேசி இயக்கி " என்பது, தொலைபேசிப் பொருத்திப் பலகையை இயக்குதற்கும், தொலைபேசி அழைப்புகளை ஆக்குதற்கும் ஏற்றற்கும், தொலைபேசி விசாரணைகளுக்கு மறுமொழி கூறுதற்கும், அது தொடர்பான சாதனங்களை எழுதிவைத்தற்கும் முற்றிலும் அல்லது பிரதானமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒருவர் எனப் பொருள்படும் ;

(6) " பண்டகசாலைப் பொறுப்பாளர் " என்பது, தொகைப் பண்டங்கள் வைக்கப்பட்டுள்ள பண்டக அறையொன்றிற்குப் பொறுப்பாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவரும் அவ்வண்ணம் பண்டங்களுக்குப் பொறுப்பாயிருத்தல் தொடர்பாக வேண்டிய புத்தகங்களையும் சாதனங்களையும் எழுதிவைத்தற்குப் பொறுப்பாளியாயுள்ளவருமான ஒருவரெனப் பொருள்படும் ;

(7) " தொழிலாளர் " என்பது, தேர்ச்சியற்ற எவ்வேலையையும் செய்தற்கு வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒருவரெனப் பொருள்படும்.

அட்டவணை

1. அப்துல் சத்தார் கச்சி யூசுப் அண்டு கொம்பனி, 123, பிரின்ஸ் வீதி, கொழும்பு 11.
2. அமீன் ரிறேடேர்ஸ், 230, பிரதான வீதி, கொழும்பு 11.
3. அசீஸ் ரிறேடேர்ஸ், 112, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
4. பூஜா ஸ்டோர்ஸ், 222, கெய்ஸர் வீதி, கொழும்பு 11.
5. கரீம், ஐ. ஏ., 125, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
6. கார்வாலியோ, ஜே. எல். 144, பிரதான வீதி, கொழும்பு 11.
7. காசிம் பிரதேர்ஸ், 89, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
8. சித்திரதாஸ், 77, பிரதான வீதி, கொழும்பு 11.
9. கிறசென்ற் ரிறேடேர்ஸ், 8/2, சாப்பல் ஒழுங்கை, கொழும்பு 11.
10. டாடா அண்டு கொம்பனி, எச். ஏ., 218, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
11. இஸ்மெயில் அண்டு கொம்பனி, ஏ. ஆர்., 28–30, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
12. பைரோஜி லிமிற்றெட், 36–38, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
13. கச்சி முகம்மது அண்டு சன்ஸ் லிமிற்றெட், 107, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
14. கச்சி சலே முகம்மது அண்டு கொம்பனி, 106, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
15. காசிம், எம். ரீ. எம்., 248, பிரதான வீதி, கொழும்பு 11.
16. காசிம், டபிள்யூ. எம்., 251–253, பிரதான வீதி, கொழும்பு 11.
17. கைதரர்மணி லிமிற்றெட், 65–69, சதாம் வீதி, கொழும்பு 1.
18. இஸ்மெயில் பவா அண்டு கொம்பனி, 117, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
19. எம். ஜமால் அண்டு கொம்பனி, 93, பாங்சோல் வீதி, கொழும்பு 11.
20. குண்டன்மால்ஸ் லிமிற்றெட், 110/114, பிரதான வீதி, கொழும்பு 11.
21. இலங்கா ரிறேடேர்ஸ், 156, கெய்சர் வீதி, கொழும்பு 11.
22. இலக்கி ரெக்ஸ்ரைல்ஸ், 119, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
23. மய்க்கி ஸ்ரோர்ஸ், 265, பிரதான வீதி, கொழும்பு 11.
24. மிஸ்கின், ரீ. ஏ., 125, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
25. மௌலானு (இலங்கை) லிமிற்றெட், 186/188, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
26. நாகின்தாஸ் அண்டு கொம்பனி லிமிற்றெட், எச். ஏ., 137, பிரதான வீதி, கொழும்பு 11.
27. நவலோக ரெக்ஸ்ரைல்ஸ், 79, கெய்சர் வீதி, கொழும்பு 11.
28. நியூலங்கா ரிறேடேர்ஸ், 71, கெய்சர் வீதி, கொழும்பு 11.
29. நூர் முகம்மது அண்டு சன்ஸ், 129, மூன்றும் குறுக்கு வீதி, கொழும்பு 11.
30. பேள் ரெக்ஸ்ரைல்ஸ், 145, கெய்சர் வீதி, கொழும்பு 11.
31. பீசன்ஸ், 136, பிரதான வீதி, கொழும்பு 11.
32. பேசுமால் அண்டு கொம்பனி, எம்., 141, பிரதான வீதி, கொழும்பு 11.
33. பெற்று கோணர், 212, கெய்சர் வீதி, கொழும்பு 11.
34. பொப்புயலர் ஸ்டோர்ஸ் (சிலோன் வேவறிற் ஸ்டோர்ஸ்), 130, கெய்சர் வீதி, கொழும்பு 11.
35. றபீக் ரிறேடிங் கொம்பனி, 184–186, பிரதான வீதி, கொழும்பு 11.
36. ராம் பிரதேர்ஸ், 140, பிரதான வீதி, கொழும்பு 11.
37. ரத்தினம்ஸ், 146, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
38. றிவாட்ஸ், 162 டீ., முதலாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
39. ரூபி ரெக்ஸ்ரைல்ஸ், 192, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
40. சீசன்ஸ், 229, பிரதான வீதி, கொழும்பு 11.
41. சேவாகிராம் அண்டு சன்ஸ் லிமிற்றெட், 106, பிரதான வீதி, கொழும்பு 11.
42. சிட்டிக் அண்டு கொம்பனி, 164–168, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
43. சிறீ ரம்ய ஸ்ரோர்ஸ், 151, இரண்டாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.
44. சுலைமான் அண்டு பிரதேர்ஸ், 109–111, கெய்சர் வீதி, கொழும்பு 11.
45. ராஜ்மகால் சில்க் ஸ்ரோர்ஸ், 36, றெக்கிளமேசன் வீதி, கொழும்பு 11.
46. உவெஸ்ற் டிறேப்பறி ஸ்ரோர்ஸ் லிமிற்றெட், 122, பிரதான வீதி, கொழும்பு 11.
47. சீநாத் ஸ்ரோர்ஸ், 162 சீ, முதலாம் குறுக்கு வீதி, கொழும்பு 11.

3–988—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

### 1961 ம் ஆண்டின் 33 ம் இலக்க உற்பத்திப் பொருள் (உத்தரவாத விலையும், நெல் குற்றுதலும் கட்டுப்பாடு செய்யும்) சட்டம்

3 ம் பிரிவின் கீழ் இடப்பட்ட கட்டளை

1961 ம் ஆண்டின் 33 ம் இலக்க உற்பத்திப் பொருள் (உத்தரவாத விலையும் நெல் குற்றுதலும் கட்டுப்பாடு செய்தலும்) சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, உத்தரவாத விலை ஆலோசனைக் குழுவின் ஆலோசனையுடனும் நிதி அமைச்சருடன் கலந்தாலோசித்த பின், விவசாய காணி மந்திரியின் அதிகாரத்தோடும் இரண்டாம் நிரையில் கொடுக்கப்பட்ட உத்தரவாத விலைகளை முதலாம் நிரையில் கொடுக்கப்பெற்ற உற்பத்திப் பொருள்கட்கு கமத்தொழிற் சேவை ஆணையாளர் மகிபால முதலிகே வில்பிறட் ஸ்ரன்லி குணரத்ன ஆகிய நான் இக்கட்டளை மூலம் உத்தரவாதம் செய்கிறேன். விலைவிபரங்களுக்குரிய குறிப்பிட்ட கால எல்லையை மூன்றாம் நிரை காட்டுகின்றது.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பங்குனி மீ 14 ந் உ.

அட்டவணை

| நிரை I | நிரை II | நிரை III |
|---|---|---|
| | ரூ. ச. | |
| துவரம்பருப்பு (முழுது) அந்தர் ஒன்றுக்கு | 78 40 | 73.3.1 ல் இருந்து 73.12.31 வரை |

3–1022—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 செற்றெம்பர் மாதம் 8 ஆந் தேதிய 24 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 8 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள மெதிரிக்கிரிக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) மெதிரிகிரி, சைத்திய வீதி, 565 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கேவாவசம் ரெவுல்கே பியதாச அவர்கள்.

(2) மெதிரிகிரி, தியசென்புரம் 262 ஆம் இலக்கக் கிராமசபைத் தலைவர் இல்லத்தைச் சேர்ந்த கே. எம். பொடிநிலமே அவர்கள்.

(3) மெதிரிகிரி, தியசென்புரம், ஜன்சன் கோட்டலைச் சேர்ந்த உடுகம ஆரச்சிகே புஞ்சிபண்டா அவர்கள்.

(4) மெதிரிகிரி, சைத்திய வீதி, 658 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குடாதந்திரிகே றய்தன் சிஞ்ஞோ அவர்கள்.

(5) மீகஸ்வெவை, வடிகவெவையைச் சேர்ந்த தேரத் காமிகே முதுபண்டா அவர்கள்.

(6) மெதிரிகிரி, பிசோபண்டார சங்கத்தின் வட்டோறு கெதர முதியஞ்சே அவர்கள்.

(7) கல்லோயாச் சந்தியைச் சேர்ந்த டீ. விஜேசிங்க அவர்கள்.

(8) கல்லோயாச் சந்தி, றெட்டவெவையைச் சேர்ந்த பீ. மெணிக்ரால அவர்கள்.

(9) திவுலன்கடவலை, தான்யாவை, 62 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வட்டக்கொட முதலிகே தொன் குணவர்த்தன அவர்கள்.

(10) மெதிரிகிரி, தியசென்புரம் 806 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த காலவில பதிரணகே பியசேன அவர்கள்.

(11) மெதிரிகிரி, கோம்பதமனே 462 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ராஜபக்ச துரயலாகே சரநேலிஸ் அவர்கள்.

(12) மெதிரிகிரி, வாய்க்கால் சந்தி டீ. 8 ஐச் சேர்ந்த பதிநாயக்க ஆரச்சிகே குணதாச அவர்கள்.

(13) மெதிரிகிரி, தியசென்புரம் சாந்தி நெல் குத்தும் ஆலையைச் சேர்ந்த டபிள்யு. கே. ஏ. சோமசிறி அவர்கள்.

(14) மெதிரிகிரி, தியசென்புரம் 755 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குணதாச தென்னபிற்றகேன அவர்கள்.

(15) சிங்கரக்கொடை, மீகஸ்வெவையைச் சேர்ந்த டிங்கிரிபண்டாகே கருணாரத்தின அவர்கள்.

(16) திவுலக்கடவலை, குசும்பொக்குணை 359 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உடுவக லேகம்லாகே டிங்கிரிபண்டார குணரத்தின அவர்கள்.

(17) மீகஸ்வெவை, வடிகவெவையைச் சேர்ந்த சமரசிங்ககமகே அப்புகாமி சமரசிங்க அவர்கள்.

(18) மெதிரிகிரி, சைத்திய வீதி, 550 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உடகெதர சரணதுங்க அவர்கள்.

(19) மெதிரிகிரி, சைத்திய வீதி, 669 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ்சேலாகே உக்குபண்டா அவர்கள்.

(20) மெதிரிகிரி, சைத்திய வீதி, ஏக்கர் 13 ஐச் சேர்ந்த கெட்டியாரச்சிலாகே சந்திரசேன் அவர்கள்.

(21) சிங்குரக்கொடை, மீகஸ்வெவை, வடிகவெவையைச் சேர்ந்த கோரத்காமிகே முதுபண்டா அவர்கள்.

(ஆ) மெதிரிகிரி, சைத்திய வீதி, 565 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கேவாவசம் ரெவுல்கே பியதாச அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 15 ந் உ.

3–1029/1—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆந் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1971 ஏப்பிரல் மாதம் 8 ஆந் தேதிய 14,953 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 11 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட கண்டி மாவட்டத்திலுள்ள பளிஸ்பற்றுக் கிழக்கு (மெ. து.) கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) தெல்தெனியா, காளியத்தையைச் சேர்ந்த ரம்பண்டா ரனதுங்க அவர்கள்.

(2) புட்டுகபுவை, சிட்டவையைச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ்சேலாகே ஜயரத்தின திசாநாயக்க அவர்கள்.

(3) வேரப்பிட்டியைச் சேர்ந்த குணரத்தின தசநாயக்க அவர்கள்.

(4) ரங்கலை, கலபடவத்தையைச் சேர்ந்த அகலவத்தேகெதர யசவர்த்தன அவர்கள்.

(5) வேரப்பிட்டியைச் சேர்ந்த வீரக்கோன் முதியஞ்சேலாகே தயாரத்தின பண்டா அவர்கள்.

(6) வேரப்பிட்டி, பகலகமவேரப்பிட்டியைச் சேர்ந்த கொம கொடகெதர அபேரத்தின அவர்கள்.

(7) புட்டுகபுவை, கிட்டவையைச் சேர்ந்த ஏகநாயக்க முதியஞ் சேலாகே கீன்பண்டா அவர்கள்.

(8) மகுல்தெனியா, கிட்டவரதிவெலேயைச் சேர்ந்த ராஜபக்ச உடகெதர பிரேமதாச அவர்கள்.

(9) புட்டுகபுவையைச் சேர்ந்த ராஜபக்ச உடகேன்கெதர ராஜபக்ச அவர்கள்.

(10) புட்டுகபுவை, வட்டபாணையைச் சேர்ந்த கீன்பண்டா குலசேகர அவர்கள்.

(11) புட்டுகபுவை, வட்டபாணையைச் சேர்ந்த தெனியேகெதர முதுபண்டா அவர்கள்.

(12) தெல்தெனியா, கும்பல்லொழுவையைச் சேர்ந்த கஹட் டதெனியேகெதர கிரிஹட்டனு அவர்கள்.

(13) தெல்தெனியா, கரளியத்தையைச் சேர்ந்த விஜேசுந்தர முதியஞ்சேலாகே விஜேரத்தின அவர்கள்.

(14) தெல்தெனியா, கரளியத்தையைச் சேர்ந்த விஜேசிங்க முதியஞ்சேலாகே பொத்தல்கொட அவர்கள்.

(15) தெல்தெனியா, கரளியத்தையைச் சேர்ந்த உடவளவ்வே ஏகநாயக்க அவர்கள்.

(16) தெல்தெனியா, அழுத்வெலேயைச் சேர்ந்த கபுகெதர புஞ்சிபண்டா அவர்கள்.

(17) தெல்தெனியா, உடவெலேயைச் சேர்ந்த கரபாவேகெதர அபேகோன் அவர்கள்.

(18) தெல்தெனியா, உடவெலேயைச் சேர்ந்த உடகெதர கிரால அவர்கள்.

(19) கண்டிமத்தி, வேகலேயைச் சேர்ந்த சேனுநாயக்க முதியஞ் சேலாகே திசாநாயக்க அவர்கள்.

(20) கண்டிமத்தி, வேகலேயைச் சேர்ந்த கழுபண்டா தென்னக் கோன் அவர்கள்.

(21) தெல்தெனியா, ரம்புக்வெல்லேயைச் சேர்ந்த ரம்பண்டா ஏகநாயக்க அவர்கள்.

(22) தெல்தெனியா, ரம்புக்வெல்லேயைச் சேர்ந்த ரணசிங்க பண்டா திசாநாயக்க அவர்கள்.

(ஆ) தெல்தெனியா, கரளியத்தையைச் சேர்ந்த ரம்பண்டா ரனதுங்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக் கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிறமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 15 ந உ.

3—1029/2—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**வடமாகாணத்தின் ஒழுங்குவிதிகள்**

1973 பெப்ரவரி 15 ஆம் தேதிய 47 ஆம் இலக்க இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, வடமாகாணத்தின் சிறகுவலை தொடர்பாய் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளில் செய்யப் பட்ட திருத்தம்பற்றி விசாரணை செய்த கடற்றொழில் அமைச்சின் உதவிச்செயலாளர் திரு. வி. எல். சி. பீற்றர்ஸ் அவர்களின் அறிக்கையைப் பார்க்கவும்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயம் தொடர்பாய் யாராவது முறைப்பாடுகள் செய்யவிரும்பின் எழுத்துமூலமான முறைப் பாடுகளை கடற்றொழில் இயக்குநர், த. பெ. என். 531, கொழும்பு 3, என்ற முகவரிக்கு 1973 ஏப்ரல் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு மாச்சு மீ 14 ந உ.

3—978—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**உரிமைக்கோரிக்கை அறிவித்தல்**

நெல் சந்தைப்படுத்தற் சபை

கமத்தொழில், காணி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தற் சபையின் உத்தியோகத்தர் என்ற வகையில் வர்ணகுலசூரியா வடுமேஸ்ரிகே ஜினதாசா மெண்டிஸ் ஆகிய நான் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல்சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இங்குள்ள பட்டோலையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகள் சொல்லப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட வகுப்பினையும் விவரணத்தினையுமுடைய சொத் துகளாகவிருப்பதனால் அவை நெல்சந்தைப்படுத்தற் சபையின் நோக்கங்களுக்காக வேண்டப்படுகின்றனவென இத்தால் பிரகடனப் படுத்துகிறேன்.

டபிள்யூ. டபிள்யூ. ஜே. மெண்டிஸ்,
பொது முகாமையாளர்
நெல் சந்தைப்படுத்தற் சபை.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 12 ந உ.

**மேலே குறிப்பிடப்பட்ட பட்டோலை**

மொத்தம் மூவாயிரத்து அறுநூற்றி எண்பத்து மூன்று சதுர அடி (3,683 சதுரஅடி) தளப்பரப்பைக் கொண்ட இரு மாடிகளையுடைய கண்டிதலதாவீதி வளவு 8 ஆம் இலக்கத்தைக் கொண்ட கட்டடம் முழுவதும் அத்தோடு மேற்கூறிய மத்தியமாகாணம் கண்டி மாவட்டத் தில் கண்டி மாநகராட்சி மன்ற எல்லைக்குள் அக்கட்டடம் அமைந்த 1 றூட் 8 பேர்ச்சஸ் பரப்பளவுடைய (0 ஏக்கர் 1 றூட் 8 பேர்ச்சஸ்) காணியும். அதன் எல்லைகள் வருமாறு :— வடக்கில் மார்ட்டின் ஜயத்திலகாவின் காணி, கிழக்கில் நியூகுயின் ஹோட்டல் வளவு, தெற்கே வாட் வீதி (இப்பொழுது தலதாவீதி), மேற்கே காசில் வீதி.

டபிள்யு. டபிள்யு. ஜே. மெண்டிஸ்,
பொது முகாமையாளர்,
நெல் சந்தைப்படுத்தற் சபை.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 12 ந உ.

3—985—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**கடை, அலுவலகத் தொழிலாளர் வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை அதிகாரச் சட்டம்**

(129 ம் அத்தியாயம்)

கடை, அலுவலகத் தொழிலாளர் வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை அதிகாரச் சட்டத்தின் (129 ம் அத்தியாயம்) 32 ம் பிரமாணத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 (1) ம் பிரிவுக்கமைய, பிற கட்டளை பிறக்கும் வரை, திரு. திசநாயக முதியான்செலகே தர்மத்திலகவுக்குப் பதிலாக ஊதியமுறை மன்றுகளின் செயலாளராக, தொழில் அமைச்சர் தொழில் அலுவலர் திரு. எதிரிசிங்க தொன் சூலபால விமலரத்தினவை மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 12 ந உ.

3—971/1—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயம்) 8 ம் பிரிவுக்கமைய நிறுவப்பட்ட பின்வரும் தொழில்களுக்கான கூலி நிருணய சபைகளுக்கு, பிற கட்டளை பிறக்கும் வரை திரு. திசநாயக முடியான்செலகே தர்மதிலகவுக்குப் பதிலாகத் திரு. எதிரிசிங்க தொன் சூலபால விமலரத்தினவைத் தொழில் அமைச்சர் மகிழ்ச்சியுடன் செயலாளராக நியமித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 12 ந் வ.

1. பாண் வகைத் தொழில்.
2. பீடி உற்பத்தித் தொழில்.
3. விசுக்கோத்து, இனிப்புவகை (சொக்கலேற்று உட்பட) உற்பத்தித் தொழில்.
4. செங்கல், ஓடு உற்பத்தித் தொழில்.
5. கட்டடத் தொழில்.
6. சுருட்டு உற்பத்தித் தொழில்.
7. சினிமாத் தொழில்.
8. கறுவாத் தொழில்.
9. கொக்கோ, ஏலம், மிளகுப் பயிரீட்டு, உற்பத்தித் தொழில்.
10. தென்னைப் பயிரீட்டுத் தொழில்.
11. தெங்குப் பொருள் உற்பத்தித் தொழில்.
12. மெத்தைத் தும்பு, சிலிர்த்தும்பு ஏற்றுமதித் தொழில்.
13. துறை, துறைமுகம், துறைமுகப் போக்குவரத்துத் தொழில்.
14. பொறியியற்றொழில்.
15. உடைவகை உற்பத்தித் தொழில்.
16. மேசுவகைத் தொழில்.
17. ஐசு, வளிநீர்வகை உற்பத்தித் தொழில்.
18. குடிவகை, வின்னரித் தொழில்.
19. தீக்குச்சி உற்பத்தித் தொழில்.
20. மோட்டார்ப் போக்குவரத்துத் தொழில்.
21. பராமரிப்பு இல்லத் தொழில்.
22. நெல் குத்தற்றொழில்.
23. காரீயத் தொழில்.
24. அச்சீட்டுத் தொழில்.
25. இறப்பர் ஏற்றுமதித் தொழில்.
26. இறப்பர்ப் பயிரீட்டு, உற்பத்தித் தொழில்.
27. பதனிடல், பாதவணி, தோற்பொருள் உற்பத்தித் தொழில்.
28. தேயிலை ஏற்றுமதித் தொழில்.
29. தேயிலைப் பயிரீட்டு, உற்பத்தித் தொழில்.
30. புடைவை உற்பத்தித் தொழில்.
31. புகையிலைத் தொழில்.
32. தயர், தியூப்பு உற்பத்தி, தயர் மீளப் புனைதல், இறப்பர்–பிளாத்திக்குப் பொருள் உற்பத்தித் தொழில்.

3–971/2—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

### 1954 ஆம் ஆண்டின் (1 ஆம் இலக்கத்) தேசிய வீடமைப்பு ஒழுங்குவிதிகள்

இதன் கீழ்க் காட்டப்பட்ட தீர்மானங்கள் 1954 ஆம் ஆண்டின் (1 ஆம் இலக்கத்) தேசிய வீடமைப்பு ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் ஆக்கப்பட்டுள்ளன என அவ் ஒழுங்குவிதிகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு,
1973, மார்ச்சு, 16.

செயலாளர்,
வீடமைப்பு நிர்மாண அமைச்சு.

1954 ஆம் ஆண்டின் (1 ஆம் இலக்கத்) தேசிய வீடமைப்பு ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நிதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் ஆக்கப்பட்ட தீர்மானங்கள்.

பீ. ஜீ. பி. கெனமன்,
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
1973, மார்ச்சு, 16.

1. தேசிய வீடமைப்பு நிதியிலிருந்து வழங்கப்படக்கூடிய 10,000 ரூபாவுக்கு மேற்படாத கடன் சம்பந்தமாக அறவிடற்குரிய வட்டிவீதம் ஓர் ஆண்டுக்கு 6 சதவீதமாக இருத்தல் வேண்டும்.

2. தேசிய வீடமைப்பு நிதியிலிருந்து வழங்கப்படக்கூடிய 10,000 ரூபாவுக்கு மேற்பட்டதும் ஆனால் 15,000 ரூபாவுக்கு மேற்படாததுமான கடன் சம்பந்தமாக அறவிடற்குரிய வட்டி வீதம் ஓர் ஆண்டுக்கு 7 சதவீதமாக இருத்தல் வேண்டும்.

3. தேசிய வீடமைப்பு நிதியிலிருந்து வழங்கப்படக்கூடிய 15,000 ரூபாவுக்கு மேற்பட்ட கடன்கள் சம்பந்தமாக அறவிடற்குரிய வட்டிவீதம் ஓர் ஆண்டுக்கு 9 சதவீதமாக இருத்தல் வேண்டும்.

4. 1971 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் தேதிய 14,940 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் இத்தால் நீக்கப்படுகின்றது.

3–1065—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனச் சட்டம் 1970 ம் ஆண்டு இல. 33

இத்தால் அறியத்தருவது என்னவெனில், மேற்படி சட்டத்தின் 47 (1) ஆம் பிரிவிற்கமைய, கீழ்க்காணும் சொத்துக்களுக்காகக் கொடுபட வேண்டிய நஷ்ட ஈட்டுத்தொகை என்னால் தீர்மானிக்கப்படும் என்பதாகும்.

(அ) 05.01.1971 இன் இலங்கை வர்த்தமானி (அதிவிசேட) இல. 14,939/10 இல் பிரசுரிக்கப்பட்ட உரிமையளிக் கட்டளை இல. 1 மூலம் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத் (பொது) திற்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்கள்.

(ஆ) 5.1.1971 இன் இலங்கை வர்த்தமானி (அதிவிசேட) இல. 14,939/10 இல் பிரசுரிக்கப்பட்ட வேண்டுதற் கட்டளை இல. 1 மூலம் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்காக (பொது) ஸ்வீயேற்கப்பட்ட சொத்துக்கள்,

மேற்கூறப்பட்ட சொத்துக்களின் உரித்துக்காரர்களுக்கு இத்தால் அறியத்தருவது என்னவெனில், அப்படியான நஷ்ட ஈட்டுத் தொகை தீர்மானிக்கப்படுமுன்பு, மேற்படி சட்டத்தின் 47 (2) ம் பிரிவிற்கமைய், குறிக்கப்பட்ட சொத்துக்களின் விலைமதிப்பு சம்பந்தமான ஆதாரங்களைத் தாங்களாகவோ தங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ எனக்கு அளிப்பதற்கு உரித்துடையவர்களாவர் என்பதாகும்.

இப்படியான சாட்சியங்களிக்க விரும்புகின்ற சகலரும் தாங்களாகவோ அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ, 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ம் திகதி 9.00 மணிக்கு கொழும்பு 6 இலுள்ள சவோய் கட்டிடத்தின் 3 வது மாடியிலுள்ள விலைமதிப்புத் திணைக்களத்தின் பிரிவு அலுவலகத்தில், என்முன்பாக வெளிப்படுத்தும்படி வேண்டப்படுகின்றனர்.

எஸ். ஜூ. உ. சில்வா,
பதிற் பிரதம விலைமதிப்பாளர்.

விலைமதிப்புத் திணைக்களம்,
சவோய் கட்டிடம்,
கொழும்பு, 6, 1973 ம் ஆண்டு மார்ச் மீ 6 ந் வ.

3–830—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

**ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பு**

மேல் மாநிலம்—கொழும்புப்பகுதி

**வாகனப் போக்குவரத்துக்குத் தடைபிற்றக்கோட்டை—ஹோக்கந்தற வீதி**

மாதிவெல சந்திக்கும் தலவத்துகொட சந்திக்கும் இடையிலுள்ள பிற்றக்கோட்டை—ஹோக்கந்தற வீதியின் இரண்டாவது மைல் இலக்கம் 2/5 கொண்ட பாலம் மீள நிர்மாணிக்கப்படுவதால் இவ்வீதியின் மேற் குறிப்பிட்ட பகுதி 1973 ம் ஆண்டு எப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலம் வரை வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும் என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

மாற்றுவழி, மஹரகம-தேபானம வீதி.

சீ. ஆர். திசைநாயகம்,
வேலைகள் பணிப்பாளர், மேல் மாநிலம்.

கொனிஸ்ரன் இடம்,
கொழும்பு-7.
14.3.1973.

3–994—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி**

புகைவண்டிக் கடவை பழுது பார்த்தல்

கிரிலப்பனை நுகேகொடை புகையிரத நிலையங்களுக்கிடையிலுள்ள களனிப் பள்ளத்தாக்கு இருப்புப் பாதையில் 4 மைல் 78 சங்கிலி 05 லிங்கில் உள்ள பூவாரம் மாவத்தையில் அமைந்துள்ள புகைவண்டிக் கடவையில் 07.04.73 ம் திகதி மாலை 6.00 மணி முதல் 08.04.73 ம் திகதி காலை 5.00 மணி வரை பழுது பார்த்தல்கள் செய்யப்படும்.

இப்புகைவண்டிக் கடவை 07.04.73 ம் திகதி மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை அரைவாசியும், 07.04.73 ம் திகதி இரவு 10.00 மணி முதல் 08.04.73 ம் திகதி காலை 5.00 மணி வரை முற்றாகவும் வாகனப் போக்குவரத்தின் பொருட்டு மூடப்பட்டிருக்கும்.

முற்றாக மூடப்பட்டிருக்கும் காலத்தில் சகல வாகனங்களும் போக்குவரத்தின் பொருட்டு புகைவண்டி வீதியைப் பயன்படுத்த வேண்டும்.

ஜே. போல் சேனரத்ன,
பொது முகாமையாளருக்காக,
இ. அ. பு. பகுதி.

3–993—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்கள காரியாதிகாரி பிரிவில் 1972/73 ல் கால்நடைகளுக்குக் குறிசுடும் அட்டவணை**

1962 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ந் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட 13,496 ம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கால்நடைகளுக்குக் குறிசுடுதல் சம்பந்தமாக 12 (iii) ம் ஒழுங்கு விதிப்படி வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்கள காரியாதிகாரி பிரிவில் கால்நடைகளுக்கு குறிசுடும் கால அட்டவணை பொது சனங்கள் அறிவதற்காக கீழே பிரசுரிக்கப்படுகிறது.

எல். பி. விக்கிரமாராச்சி,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

வவுனியாக் கச்சேரி,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 7 ந் உ.

| கி. சே. பிரிவு | குறிசுடும் கிராமமும் இடமும் | குறிசுடும் நாட்கள் |
|---|---|---|
| மாமடுவ | பிரப்பமடுவ பொது மைதானம் | 1973.05.03, 02 |
| | மகாகச்சக்கொடிய மைதானம் | 1973.05.04, 05 |
| | மாமடுவ மைதானம் | 1973.05.07, 08 |
| | எற்றம்பகஸ்கட மைதானம் | 1973.05.09, 10 |
| | புதுபுளாங்குளம் மைதானம் | 1973.05.11, 12 |
| | கொக்குவெவிய மைதானம் | 1973.05.14, 15 |
| | பறையர்சின்னக்குளம் மைதானம் | 1973.05.18, 19 |
| மடுக்கந்த | மலையர்பருத்திக்குளம் மைதானம் | 1973.05.02, 03 |
| | நெடுங்குளம் மைதானம் | 1973.05.04, 05 |
| | மடுக்கந்தை மைதானம் | 1973.05.07, 08 |
| | மகாமைலன்குளம் மைதானம் | 1973.05.09, 10 |
| | குடாகச்சக்கொடிய மைதானம் | 1973.05.11, 12 |
| ஈரற்பெரியகுளம் | திருவேகம மைதானம் | 1973.05.02, 03 |
| | அலகல்ல மைதானம் | 1973.05.04, 05 |
| | சின்னக்குளம் மைதானம் | 1973.05.07, 08 |
| | அலுத்கம மைதானம் | 1973.05.09, 10 |
| | இளமருதங்குளம் மைதானம் | 1973.05.11, 12 |
| | கல்குண்டன்மடுவ மைதானம் | 1973.05.14, 15 |
| | ஈரற்பெரியகுளம் மைதானம் | 1973.05.18, 19 |
| | அவுசதப்பிட்டிய மைதானம் | 1973.05.23, 24 |
| உளுக்குளம | உளுக்குளம மைதானம் | 1973.05.02, 03 |
| | மருதன்மடுவ மைதானம் | 1973.05.04, 05 |
| | அறுகம்புல்எலிய மைதானம் | 1973.05.07, 08 |
| | இடதுகரை குடியேற்ற மைதானம் | 1973.05.09, 10 |
| பூமடுவ | அவரன்துலாவ மைதானம் | 1973.05.02, 03 |
| | பழையஊருவ மைதானம் | 1973.05.04, 05 |
| | வாரிக்குட்டியூருவ மைதானம் | 1973.05.07, 08 |
| | காலியனூருவ மைதானம் | 1973.05.09, 10 |
| | வலதுகரை குடியேற்ற மைதானம் | 1973.05.11, 12 |

காரியாதிகாரி,
வ. தெ. சிங்களப் பிரிவு,
வவுனியா.

3–838/1—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**வவுனியா மாவட்டத்தில் புதுக்குடியிருப்புக் காரியாதிகாரி பிரிவில் 1973 ல் கால்நடைகளுக்குக் குறிசுடும் அட்டவணை**

1962 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ம் திகதி தமிழில் பிரசுரிக்கப்பட்ட 13,406 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கால்நடைகளுக்குக் குறிசுடுதல் சம்பந்தமாக 12 (iii) ம் ஒழுங்கு விதிப்படி வவுனியா மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு காரியாதிகாரி பிரிவில் கால்நடைகளுக்குக் குறிசுடும் கால அட்டவணை கீழே பிரசுரிக்கப்படுகின்றது.

| கி. சே. பிரிவு | கிராமசேவகர் பிரிவும் குறிசுடும் இடமும் | குறிசுடும் திகதி |
|---|---|---|
| 229 | கற்சிலைமடு கிராமசேவகர் அலுவலகம், ஒட்டுசுட்டான் | 24.4.73, 7.7.73, 2.12.73 |
| | பண்டாரவன்னியன் ப. நோ. கூ. சங்க முன்பகுதி, கற்சிலைமடு | 4.5.73, 4.8.73, 8.12.73 |
| | அ. த. க. பாடசாலை வளவு, சமளங்குளம் | 12.5.73, 8.9.73, 6.10.73 |
| | அ. த. க. பாடசாலை வளவு, கருவேலன்கண்டல் | 26.5.73, 16.9.73, 17.11.73 |
| | கி. மு. ச. வளவு, கூழாமுறிப்பு | 9.6.73, 18.8.73, 14.10.73 |
| | விவசாயப் போதனாசிரியர் அலுவலகம், இடதுகரை, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் | 19.6.73, 26.8.73, 4.11.73 |
| | ப. நோ. கூ. சங்க வளவு, படிவம் 2, வலதுகரை, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் | 30.6.73, 23.10.73, 25.11.73 |

| கி. சே. பிரிவு | கிராம சேவகர் பிரிவும் குறிசுடும் இடமும் | குறிசுடும் திகதி |
|---|---|---|
| 241 .. | புதுக்குடியிருப்பு தெற்கு கிராம சேவகர் அலுவலகம், புதுக்குடியிருப்பு | 26.4.73, 5.7.73, 2.10.73 |
| | காணி மேற்பார்வையாளர் அலுவலகம், ஆனந்தபுரம் | 3.5.73, 19.7.73, 30.10.73 |
| | கத்தோலிக்க தேவாலயத்தின் முன் பாக, இரணைப்பாலை | 10.5.73, 2.8.73, 9.11.73 |
| 241எ .. | புதுக்குடியிருப்பு வடக்கு கி. சே. அலுவலகம், புதுக்குடியிருப்பு | 4.5.73, 30.7.73, 31.8.73 |
| | பொறுப்பதிகாரி அலுவலகம், தேவிபுரம் | 31.5.73, 6.8.73 10.9.73 |
| | பொறுப்பதிகாரி அலுவலகம், சுதந்திரபுரம் | 11.6.73, 3.9.73, 3.12.73 |
| | குடியேற்ற அதிகாரி அலுவலகம், உடையார்கட்டு | 16.7.73, 24.9.73, 12.11.73 |
| | கத்தோலிக்க தேவாலயத்தின் முன்பு, இரணைப்பாலை | 20.8.73, 15.10.73, 10.12.73 |

எல். பி. விக்கிரமாராச்சி,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

வவுனியாக் கச்சேரி,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 10 ந் வ.

3-838/2—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

---

**கால்நடைகளுக்குக் குறிசுடல்—திருக்கோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரிவுக் காரியாதிகாரி பகுதி**

29.11.1962 ஆம் திகதி 13,406 இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1958 ஆம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் இரண்டாம் பாகத்தில் கூறிய 12 ஆம் விதியின் (iii) ஆம் உப விதியின்படி 1973 ஆம் ஆண்டில் திருக்கோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரிவுக் காரியாதிகாரி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு குறிசுடப்படும் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

திஸ்ஸ தேவேந்திர,
அரசாங்க அதிபர்,
திருக்கோணமலை மாவட்டம்.

கச்சேரி,
திருக்கோணமலை,
1973.03.09.

| கி.சே பகுதி இல. | கி.சே.பகுதியின் பெயர் | குறிசுடப்படும் இடம் | குறிசுடும் திகதி |
|---|---|---|---|
| 227 .. | கந்தளாய்.. | கி. சே. அலுவலகம் .. | 1.5.73 முதல் 21. 5.73 வரை |
| 227 .. | கந்தளாய்.. | அக்போபுர குடியேற்ற அதிகாரி அலுவலகம் | 22.5.73 முதல் 15. 6.73 வரை |
| 227 .. | கந்தளாய்.. | பேராறு குடியேற்ற அதிகாரி அலுவலகம் | 16.6.73 முதல் 5. 7.73 வரை |
| 227 .. | கந்தளாய்.. | ரஜஎல குடியேற்ற அதிகாரி அலுவலகம் | 6.7.73 முதல் 30. 7.73 வரை |
| 227 .. | கந்தளாய்.. | வான்எல குடியேற்ற அதிகாரி அலுவலகம் | 31.7.73 முதல் 20. 8.73 வரை |
| 227 .. | கந்தளாய்.. | வெண்டரசன்புர குடியேற்ற அதிகாரி அலுவலகம் | 21.8.73 முதல் 15. 9.73 வரை |
| 227 .. | கந்தளாய்.. | கந்தளாவ குடியேற்ற அதிகாரி அலுவலகம் | 16.9.73 முதல் 10.10.73 வரை |

3-961—23.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 52

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு | 2. 3.73 | வெள்ளி | 23. 2.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9. 3.73 | வெள்ளி | 2. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16. 3.73 | வெள்ளி | 9. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23. 3.73 | வெள்ளி | 16. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30. 3.73 | வெள்ளி | 23. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஏப்பிறல் | 6. 4.73 | வெள்ளி | 30. 3.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11. 4.73 | புதன் | 6. 4.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19. 4.73 | வியாழன் | 11. 4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27. 4.73 | வெள்ளி | 19. 4.73 | வியாழன் | ந.ப. 12.00 |

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்.*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ௳*

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.